

தென்னாற்காடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் ஒன்றிய பெருந் தலைவருமான வீரவேங்கை, பெருந்தலைவர் எம்.ஆர்.கே. அவர்களின் 37ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நினைவுநாள் பேரணி, பொதுக்கூட்டம் காட்டுமன்னார்கோயில் கடைவீதியில் நடைபெற்றது. கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், கோவி.செழியன் எம்.எல்.ஏ,, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் குத்தாலம் கல்யாணம், மருதூர் ராமலிங்கம், நெல்லிக்குப் பம் புகழேந்தி, மாவட்டப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், அ.முத்துசாமி, ஆடுதுறை உத்திராபதி மற்றும் கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



திருச்சி, துறையூர் எம்.எல்.ஏவும் துணை சபாநாயகருமான ரவி சங்கரைச் சந்தித்து மனு அளிக்கச் சென்றபோது துறையூரைச் சேர்ந்த கார்த்திக் என்பவரை ரவி சங்கர் தாக்கியதைக் கண்டித்தும் அவர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் மாவட்ட தி.மு.க. சார்பில் துறையூர் பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. ஸ்டாலின் குமார் உள்ளிட்ட தி.மு.க.வினர் பலர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடியில் கடலில் தவறி விழுந்து உயிரிழந்த

மீனவர் தம்பிராஜ் குடும்பத்திற்கு உரிய நிவாரணத் தொகையை வழங்குக!

குடும்பத்தினருக்கு நேரில் ஆறுதல் தெரிவித்தபின் – கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!



தூத்துக்குடி, நவ.13-

கழகத் துணைப் பொதுச் செயலாளர் - தூத் துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தூத்துக்குடியில் கடலில் தவறி விழுந்து உயி ரிழந்த மீனவர் தம்பிராஜ் அவர்களின் இல்லத் திற்குச் சென்று, அவரது குடும்பத்தினருக்கு எனது ஆறுதலைத் தெரிவித்தேன்.

இரவு 8 மணியளவில் தம்பிராஜ் கடலில் தவறி விழுந்தபோதே மீன்வளத்துறைக்குத் தக வல் தெரிவித்ததாகவும், ஆனால் உரிய நடவ டிக்கை எதுவும் எடுக்கப்படாததால், சக மீன வர்களே மறுநாள் அவரது உடலை மீட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

உயிருக்குப் போராடிய மீனவரை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்காத மீன்வளத் துறையின் அலட்சியம் கண்டிக்கத்தக்கது. மீன வர்கள் கடலில் காணாமல் போவதும், பின்னர் சடலமாக மீட்கப்படுவதும் தொடர்கதையாகி வருவது மிகுந்த வேதனையளிக்கிறது.

உயிரிழந்த மீனவர் தம்பிராஜ் அவர்களின் குடும்பத்திற்கு உரிய நிவாரணத் தொகையை அரசு உடனடியாக வழங்குவதுடன், இது போன்ற சம்பவங்களில் மீனவர்களை விரைந்து மீட்பதற்கான நடவடிக்கைகளையும் உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் போதை நபர்கள் தாக்கி உயிரிழந்த ஊர்க்காவல் படை வீரர்

வெங்கடேசன் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதி உதவி!

முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் நேரில் வழங்கினார்!

அரியலூர்,நவ.13 –

அண்மையில் போதை நபர்கள் தாக்கி உயிரிழந்த ஊர்க்காவல் படை வீரர் வெங்கடேசன் இல்லத்திற்கு முன் னாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் நேரில் சென்று குடும்பத்தினருக்கு ஆறு தல் கூறி நிதி உதவி வழங்கினார்.

அரியலூர் மாவட்டம் செந்துறை அடுத்த தளவாய் காவல் நிலையத்தில், ஊர் காவல் படை வீரராக பணிபுரிந்து வந்தவர் வெங்கடேசன் வயது 47. இவர் செந்துறைக்கு அருகிலுள்ள, நக்கம்பாடி கிராமத்தைச் சேர்ந்தவர்.

இவர் சமீபத்தில் இரவு நேர ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தபோது மது போதையில் இருந்த இளைஞர்களால் கொடூரமாக தாக்கப்பட்டு உயிரழந்ததை யொட்டி அவரது இல்லத்திற்கு முன் னாள் அமைச்சர், அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் நேரில் சென்று, துயரத்தில் வாடும் குடும்பத் தாருக்கு ஆறுதல் கூறி, தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(12.11.2026)



1. சென்னை பெரம்பூர் சக்கரபாணி தோட்டத்தில் மகளுடன் உள்ள கள்ளக்காதலை கைவிட மறுத்ததால் த.வெ.க. நிர்வாகி சரமாரியாக கத்தியால் குத்திக் கொலை ...

2. சென்னை காசிமேடு சிங்காரவேலர் நகர் பகுதியில் மது போதையில் நண்பர்களுக்குள் ஏற்பட்ட தகராறில் ரவுடி சரமாரியாக வெட்டிக் கொலை ...

3. ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி அருகே முன்விரோதம் காரணமாக கட்டிட மேஸ்திரி கத்தியால் சரமாரியாக குத்திப் படுகொலை, சடலத்துடன் மருத்துவமனைக்குச் சென்ற வாலிபர்களால் பரபரப்பு ...



4. சென்னை அபிராமபுரம், கே.வி.பி. கார்டன் பகுதியில் போதைப் பொருள் விற்பது தொடர்பான தகராறில் ஆட்டோ டிரைவர் சமாரியாக வெட்டிக் கொலை ...

5. சென்னை பெரம்பூர் சக்கரபாணி தோட்டத்தில் முன் விரோதம் காரணமாக ஆட்டோ டிரைவரை கத்தியால் குத்திக் கொலை செய்த பெயிண்டர் ....



6. கள்ளக்குறிச்சி டி.எஸ்.பி. அலுவலகத்தில் புகார் அளிக்கச் சென்ற பெண்ணிடம் டி.எஸ்.பி. பாலியல் ரீதியாக அத்துமீறியதாக பெண் புகார் ....

7. திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அருகே அரசு நிதி உதவி பெறும் பள்ளியில் இரண்டாம் வகுப்பு பயிலும் மாணவியிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட ஆசிரியர் சிக்கினான் ...

8. காஞ்சிபுரம் மாவட்டம் ஓரகடம் மேம்பாலம் அருகே டாஸ்மாக் கடைகளில் வசூலான ஒன்னறை கோடி பணம் கொள்ளை, படபாணியில் நூதன சம்பவம் ....

9. சென்னை துரைப்பாக்கம் அருகே வேம்புலி அம்மன் கோவில் தெருவில் உள்ள துர்க்கை செங்கழனியம்மன் திருக்கோவிலில் உண்டியல் பணம் மற்றும் அம்மன் கழுத்தில் இருந்த தங்கத்தாலி உள்ளிட்டவை கொள்ளை ...



10. திண்டிவனம் அருகே பிரபலமான அம்மன் கோவில் உண்டியலை உடைத்து பணம் கொள்ளை...

11. சென்னை சூளை வி.வி. கோவில் தெருவில் தங்க நகை தயாரிக்கும் நிறுவனத்தில் 44 சவரன் தங்கம் திருட்டு. ஊழியர் கைவரிசை...

12. நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே தண்ணீர் பிடிப்பது தொடர்பான தகராறில் தாய் மற்றும் மகனை சாதிப் பெயரைச் சொல்லித் தாக்கிய இந்து முன்னணி நிர்வாகி ...

13. ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் அருகே நீலகண்டராயன் வனப் பகுதியில் வெளி மாநிலத்திற்கு கடத்த இருந்த செம்மரக்கட்டைகள் சிக்கின....

14. திண்டுக்கல் மாவட்டம் செந்துறை அருகே மாமரத்துப்பட்டியில் கையில் வீச்சரிவாளுடன் நாங்க தான் கெத்து என்று வீர வசனம் பேசி ரீல்ஸ் வைரல்....



15. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் தொடரும் போதைப் பொருள் விற்பனை, தாம்பரம், சேலையூர், வேளச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் கஞ்சா சிக்கியது ....

16. புது வண்ணாரப்பேட்டையில் மளிகைக் கடையை அடித்து உடைத்ததாக திருநங்கைகள் மீது முதியவர் புகார் - போலீசார் விசாரணை!

செஞ்சி மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர்

பி.கே.பச்சையப்பன் சாலை விபத்தில் உயிரிழப்பு!

விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் அஞ்சலி!

செஞ்சி, நவ. 13-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாள ராக பணியாற்றி வந்தவர் பரதன்தாங்கல் கிராமத் தைச் சேர்ந்த பி.கே. பச்சை யப்பன் வயது 72.

இவர் தனது இருசக்கர வாகனத்தில் பரதன்தாங்கல் கிராமத்திலிருந்து செஞ் சிக்கு வந்து கொண்டிருந் தார். அப்போது செஞ்சியி லிருந்து திருவண்ணாமலை நோக்கி சென்ற பூபாலன் என்பவரின் இருசக்கர வாக னம் எதிர்பாராத விதமாக மோதியதில் பச்சையப்ப னுக்கு பலத்த காயம் ஏற் பட்டது.

108 ஆம்புலன்ஸ் மூலம் செஞ்சி அரசு மருத்துவம னைக்கு கொண்டு சென்று பரிசோதனை செய்ததில், அவர் விபத்து நடந்த இடத் திலேயே பரிதாபமாக உயி ரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலா ளர், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார் உள்ளிட்ட தி.மு.க. வினர் செஞ்சி அரசு மருத்து வமனைக்கு நேரில் சென்று விபத்தில் உயிரிழந்த பச்சை யப்பன் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மேலும் விபத்து குறித்து உரிய விசாரணை செய்ய வேண்டும் என காவல்துறை யினருக்கு அவர்கள் அறிவு றுத்தினர்.

சாலை விபத்தில் உயிரி ழந்த பி.கே. பச்சையப்பன் செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளராக பணியாற்றி வந்ததுடன், இரண்டு முறை செஞ்சி ஒன்றிய குழு உறுப் பினராகவும், செஞ்சி ஒன் றிய அவைத் தலைவராக வும் பதவி வகித்துள்ளார்.

இவருக்கு ஆசிரியை விஜயா என்ற மனைவியும், வினோதினி என்ற மகளும், தர்மராஜ், நாராயண கண் ணன் ஆகிய இரண்டு மகன் களும் உள்ளனர். மகள் வினோதினி, மகன் தர்ம ராஜ் ஆகியோருக்கு திரும ணம் ஆகிவிட்ட நிலையில், இளைய மகன் நாராயண கண்ணனுக்கு வரும் 20.12.26 அன்று திருமணம் நடக்க உள்ள நிலையில் மகனின் திருமணத்திற்கான பத்திரிகை கொடுக்கின்ற பணியில் ஈடுபட்டிருந்த போது ஒன்றிய செயலாளர் பி.கே. பச்சையப்பன் விபத் தில் உயிரிழந்த சம்பவம் அவரது குடும்பத்தாருக்கும், தி.மு.க. நிர்வாகிகளுக்கும் இடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



விழுப்புரம் செஞ்சி மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் பி.கே.பச்சையப்பன் சாலை விபத்தில் உயிரிழந்தார். தகவல் அறிந்த விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், செஞ்சி கிழக்கு ஒன்றியச் செயலாளர், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளிட்ட தி.மு.க.வினர் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று விபத்தில் உயிரிழந்த பச்சையப்பன் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

'தூயசக்தி' ஆட்சியில் தொடரும் கஞ்சா கடத்தல்!

திருவள்ளூர், நவ.13–

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி அமைந்த பிறகு போதைப்பொருள் கடத்தல் தொடர்பான புகார்கள் தொடர்ந்து எழுந்து வருவது அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது. ஆந்திர மாநிலத்தில் இருந்து திருவள்ளூர் மாவட்டம் வழியாக கஞ்சா கடத்தப்படு வதாக வந்த புகாரைத் தொடர்ந்து, மாவட்ட எஸ்.பி. உத்தரவின்பேரில் போலீசார் தீவிர வாகன சோதனை யில் ஈடுபட்டனர்.

இதன்படி, ஊத்துக்கோட்டை அருகே நாகலாபுரம் சோதனைச் சாவடியில் இருசக்கர வாகனத்தில் வந்த இருவரை போலீசார் தடுத்து நிறுத்தி சோதனையிட்டனர். அவர் கள் வைத்திருந்த பையில் சுமார் 12 கிலோ கஞ்சா இருப்பது கண்டுபிடிக் கப்பட்டது.

விசாரணையில், ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முத்துக்காளை (30), சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கார்த்திகேயன் (32) ஆகியோர் கஞ்சா கடத்தி வந்தது தெரியவந்தது. மேலும், திருவள்ளூர் சுற்றுவட்டாரப் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு விற்பனை செய்ய கஞ்சா கொண்டு வந்ததும் தெரிய வந்தது.

இதையடுத்து இருவரையும் கைது செய்த போலீசார், கஞ்சாவைப் பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் மத்திய சிறையில் அடைத்தனர். இந்த சோப்பளாங்கி ஆட்சியில் போதைப்பொருள் கடத் தல் புகார்கள் தொடர்ந்து நடைபெறு கிறது. மாணவர்கள், இளைஞர்க ளின் எதிர்காலத்தைப் பாதிக்கும் கஞ்சா புழக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.